ISSN:2583-2379



# ஆய்வு நோக்கில் நற்றிணைப் பாடல்களின் அமைப்பும் பகுப்பும்

**முனைவர் மு. முஹம்மது ரஃபீக்**
*உதவி பேராசிரியர் (அரபு மற்றும் இஸ்லாமியத் துறை)*
*பி.எஸ்.ஏ. கிரசன்ட் பல்கலைக்கழகம்*
*வண்டலூர், சென்னை.*

**Dr. Mohamed Rafiq Hasani**
Assistant Professor,
School of Arabic and Islamic Studies,
B.S. Abdur Rahman Crescent Institute of Science & Technology,
Chennai, India.
Email: rafiq@crescent.education

***நி. அமிருதீன் M.A M.PHIL, NET***
*உதவி பேராசிரியர் (முதுகலை தமிழ்த் துறை)*
*ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி)*
*திருச்சி. 620020*

**Dr. Amirudeen M.A. M.Phil., NET**
Assistant Professor,
Jamal Mohamed College, Trichy 620020
Email: amirudeen71@gmail.com

## Abstract:

The Sangam literatures of the exalted and classical Tamil language serve as a time mirror reflecting the culture of the Sangam-era Tamils. In Tamil literature, the Ettuthokai (Eight Anthologies) and Pathuppaattu (Ten Idylls) hold a special place, history, and value. A unique feature of these works is that they were composed by more than four hundred poets. Among the Sangam literatures, the Narrinai holds a distinctive place of its own. The aim of this article is to examine the structure and classification of the Narrinai.

In this article, all the poems of the Narrinai have been classified based on the number of lines, the types of statements, the number of poets—particularly the number of women poets—and the thematic landscape (thinai). Furthermore, it has been established, with supporting evidence, that the statements of the thozhi (female friend) are predominant in the Narrinai.

## முன்னுரை

உயர்தனிச் செம்மொழியாம் தமிழ் மொழியின் சங்க இலக்கியங்கள் சங்கத் தமிழரின் பண்பாட்டை விளக்கும் காலக் கண்ணாடியாகத் திகழ்கின்றன. தமிழ்மொழியில் எட்டுத் தொகைக்கும், பத்துப்பாட்டுக்கும் சிறப்பான இடமும், வரலாறும், மதிப்பும் உண்டு. இவ்விலக்கியங்களில் நானூற்றுக்கும் அதிகமானப் புலவர்கள் பாடியிருப்பது தனிச்சிறப்பாகும். சங்க இலக்கியத்தில் நற்றிணையானது, தனக்கென ஒரு தனியிடத்தைப் பெற்றுள்ளது. நற்றிணையின் அமைப்பையும் பகுப்பையும் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## கருதுகோள்

“நற்றிணையின் பாடல்களில் தோழியின் கூற்றுகளே அதிகமாக உள்ளன" என்ற கூற்றே இவ்வாய்வின் கருதுகோளாகும்.

**ஆய்வு முறைகள்**

இக்கட்டுரையில் தொகுப்பாய்வு, பகுப்பாய்வு, விளக்கமுறை ஆய்வு போன்ற ஆய்வு முறைகள் கையாளப்பட்டுள்ளன.

**நற்றிணை**

புலவர்கள் தம் வாழ்வில் கண்டதையும், தம் அனுபவத்தையும் உணர்ச்சி குறையாமல் பாடல்களாக வடித்துள்ளனர். **“ஆழ்ந்த அனுபவத்தை உள்ளத்தில் உணர்வதன் பயனே புலவர்களுக்கு இன்றியமையாதது”** என்கிறார் திரு ஐ.ஏ. ரிச்சர்ட்ஸ். (டாக்டர் மு.வரதராசன், பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை, ப.-402) இவரது கூற்றிற்கு இணங்க சங்க இலக்கியப் புலவர்கள் அனைவரும் இயற்கையோடு இயைந்த மக்களின் வாழ்க்கையை உணர்வுப்பூர்வமாகப் பாடியுள்ளனர். நற்றிணை சங்க இலக்கியங்களில் உள்ள எட்டுத் தொகை நூல்களுள் முதலாவதாகும். இதனை,

**“நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு**
**ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்**

**கற்றறிந்தோர் ஏத்தும் கலியே, அகம், புறம் என்று**

**இத்திறத்த எட்டுத் தொகை"** (ச.வே.சுப்பிரமணியன்., சங்க இலக்கியம் எட்டுத்தொகை நற்றிணை, ப.-13) என்ற பாடல் உணர்த்துகின்றது. நல் + திணை = நற்றிணை என்றாகும். 'நல்' என்ற சொல்லுக்கு நல்ல ஒழுக்கலாறுகளைக் கூறுவது என்று பொருள். 'திணை' என்ற சொல்லுக்குக் கொண்ட கொள்கையில் திண்மையாக நிற்பது என்று பொருள். திணை என்பது திண்மையை உடையது . வாழ்வில் கடைபிடிக்க வேண்டிய ஒழுக்கங்களைத் திறம்படக் கடைபிடிக்க வேண்டும் என்று கூறுவதே நற்றிணை என்பதை இதன் வழி உணர முடிகின்றது.

**தொகுப்பித்தவர்**

நற்றிணைப் பாடல்களைத் தொகுக்கச் செய்தவர் பன்னாடு தந்த பாண்டியன் மாறன்வழுதி. இவர் அரசராகவும், புலவராகவும் இருந்தார்.**"அழுந்துபடு விழுப்புண் வழும்புவாய் புலரா" (நற். - 97).** எனத் தொடங்கும் நற்றிணையின் முல்லைத் திணைப் பாடலையும், **"நீள்மலைக் கலித்த பெருங்கோற் குறிஞ்சி" (நற். - 301)** எனத் தொடங்கும் நற்றிணையின் குறிஞ்சித்திணைப் பாடலையும் பாடியவர் இவரே ஆவார். இவரது காலம் கி.பி. 400-க்கும், கி.பி. 500-க்கும் இடைப்பட்டதாகும்.

**புலவர்களின் எண்ணிக்கை**

நற்றிணைப் பாடல்களைப் பாடிய புலவர்களின் எண்ணிக்கையில் கருத்து வேறுபாடுகள் தமிழ் அறிஞர்களிடம் இருப்பினும், ச.வே. சுப்ரமணியன் பின்வருமாறு கூறுகிறார். **"192 புலவர்களால் பாடப்பெற்றது நற்றிணை."** (ச.வே.சுப்பிரமணியன்., சங்க இலக்கியம் எட்டுத்தொகை நற்றிணை. ப.-20). நற்றிணைப் பாடல்களைப் பாடிய புலவர்களுள் தேல்புரி பழங்கயிற்றனார், மடல் பாடிய மாதங்கீரனார், வண்ணப்புறக் கந்தரத்தனார், மலையனார், தனிமகனார், விழிக்கண் பேதை பெருங்கண்ணனார், தும்பிசேர் கீரனார் ஆகிய எழுவரும் பாடலில் உள்ள சொற்றொடர்களால்; பெயர்

பெற்றவர்கள் ஆவர். நற்றிணையின் கடவுள் வாழ்த்தைப் பாரதம் பாடிய பெருந்தேவனார் பாடியுள்ளார்.

ஒரு பாடலை மட்டும் பாடிய புலவர்கள் நூற்றி நாற்பத்து மூன்று பேர், இரண்டு பாடல்களைப் பாடிய புலவர்கள் இருபத்து மூன்று பேர்,மூன்று பாடல்களைப் பாடிய புலவர்கள் பதிமூன்று பேர், நான்கு பாடல்களைப் பாடிய புலவர்கள் இரண்டு பேர்.,ஐந்து பாடல்களை ஒரு புலவர் பாடியுள்ளார். ஆறு பாடல்களை ஒரு புலவர் பாடியுள்ளார்.,ஏழு பாடல்களைப் பாடிய புலவர்கள் இரண்டு பேர். ஒன்பது பாடல்களை ஒரு புலவர் பாடியுள்ளார். பத்துப் பாடல்களைப் பாடிய புலவர்கள் இரண்டு பேர், பதினொன்று பாடல்களை ஒரு புலவர் பாடியுள்ளார்,மேலும் இரண்டு புலவர்கள் தலா 20 பாடல்களைப் பாடியுள்ளனர். பாடிய புலவர்களின் பெயர் அறிய முடியாத பாடல்களின் எண்ணிக்கை 56 ஆகும்.

**பெண் பாற் புலவர்கள்**

சங்க இலக்கியத்தில் முப்பத்து ஒன்று பெண்பாற்புலவர்களின் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. அதில் நற்றிணைப் பாடல்களைப் பாடியோர் பத்து பேர். மொத்த பாடல்கள் இருபத்து இரண்டு. அவற்றுள் ஏழு பாடல்களை ஔவையாரும், மூன்று பாடல்களை வெள்ளி வீதியாரும், ஒரு பாடலை அஞ்சில் அஞ்சியாரும், இரண்டு பாடல்களைக் கழார்க்கீரன் எயிற்றியாரும், ஒரு பாடலைக் காமக்கனி நப்பசலையாரும், இரண்டு பாடல்களை நல்வெள்ளியாரும், ஒரு பாடலை குறமகள் குறிஎயினியும், இரண்டு பாடல்களை நக்கண்ணையாரும், ஒரு பாடலை மாறோகத்து நப்பசலையாரும், இரண்டு பாடல்களை மதுரை ஒலைக்கடையத்தார் நல்வெள்ளையார் ஆகிய பெண்பாற் புலவர்கள் எழுதியுள்ளனர்.

**அடிவரையரை**

அடிவரையறை என்பதன் பொருளாக **“அடி எல்லை, அடிக்கட்டுப்பாடு, அடிக்கணக்கு”** (மதுரைத் தமிழ் அகராதி ப.-24) என்று மதுரைத் தமிழ்ப் பேரகராதி பொருள் பகர்கின்றது.

நற்றிணையில் 7 அடி முதல் 13 அடி வரை உள்ள பாடல்கள் பல உள்ளன. அவையாவன,

| | |
|---|---|
| 7 அடி பாடல் | - 001 |
| 8 அடி பாடல் | - 001 |
| 9 அடி பாடல்கள் | - 106 |
| 10 அடி பாடல்கள் | - 096 |
| 11 அடி பாடல்கள் | - 110 |
| 12 அடி பாடல்கள் | - 077 |
| 13 அடி பாடல்கள் | - 008 |
| **மொத்தம்** | - 399 |

நற்றிணையின் 234-ஆம் பாடல் கிடைக்கவில்லை. ஆயினும் இப்பாடல்கள் அனைத்தும் ஒன்று சேர்ந்து சங்க கால மக்களின் வாழ்வைப் பிரதிபலிப்பதில் முக்கிய இடம்பிடித்துள்ளன என்பது புலனாகின்றது.

**கூற்றுக்கள் அடிப்படையில் பாடல்கள் எண்ணிக்கை**

கூற்று என்பதற்கு **‘சொல்’** என்ற பொருளைத் தருகின்றது தமிழ்மொழி அகராதி. (நா. கதிரைவேற்பிள்ளை, தமிழ் மொழி அகராதி, ப.-507). நற்றிணையின் 399 பாடல்களும் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு திகழ்கின்றன. அவை பின்வருமாறு அமைந்துள்ளன.

தோழி கூற்று - 217 பாடல்கள்

| | |
|---|---|
| தலைவி கூற்று | - 084 பாடல்கள் |
| தலைவன் கூற்று | - 073 பாடல்கள் |
| நற்றாய் கூற்று | - 011 பாடல்கள் |
| பரத்தை கூற்று | - 009 பாடல்கள் |
| கண் டோர் கூற்று | - 002 பாடல்கள் |
| செவிலி கூற்று | - 001 பாடல் |
| தேர்ப் பாங்கன் கூற்று | - 001 பாடல் |
| பாங்கன் கூற்று | - 001 பாடல் |
| **மொத்தம்** | - 399 |

**தோழியின் கூற்று அதிகமாக இடம்பெறக் காரணம்**

தலைவியின் காதலைத் தூது கொண்டு செல்வதில் ஆரம்பித்து, தலைவனை இழந்த தலைவியை ஆற்றுப்படுத்துவது வரை தோழியின் பங்கு மிக மிக அவசியமான ஒன்று. தலைவன் தலைவிக்கிடையே பாலமாக செயல்படுபவள் தோழி. தலைவியின் குடும்பத்தாருக்கு நம்பிக்கைக்குரியவளாக இருப்பவளும் தோழிதான். இச்சிறப்பு வாய்ந்த தோழியின் கூற்றுகளே நற்றிணையில் அதிகமாக இருப்பதை மேற்காண் புள்ளி விவரங்கள் வழியாக அறிய முடிகின்றது.

**திணை அடிப்படையில் நற்றிணைப் பாடல்கள்**

திணை என்பதன் பொருளாக **"நிலம், குலம், இடம், வீடு, ஒழுக்கம்"** என தமிழ்-தமிழ் அகரமுதலியில் காணலாம். (மு. சண்முகப்பிள்ளை, தமிழ் தமிழ் அகரமுதலி, ப.-571). **"திணை இலக்கியம் என்பது நில அடிப்படையுடையது. நிலமும், பருவப் பொழுதுகளும் இயற்கையும், இவற்றைப் பின்னணியாகக் கொண்ட மனித வாழ்வுச் சாயலும், அதில் வாழும் உயிரினச் சாயலும் ஓவியமாக படிந்து கிடப்பதே ஆகும்."**

(தமிழண்ணல், சங்க இலக்கிய ஒப்பீடு, ப.-33) என்று தமிழண்ணல் கூறுகின்றார். இயற்கைச் சூழலைவிட்டு மக்களைப் பிரிக்க இயலாத அளவிற்கு மக்களின் வாழ்க்கை அவர்களது நிலத்துடனும், இயற்கைச் சூழலுடனும் ஒன்றியிருப்பதை திணை இலக்கியம் புலப்படுத்துகின்றது. நற்றிணையில்,

| | | |
|---|---|---|
| குறிஞ்சித் திணைப் பாடல்கள் | - | 130 |
| பாலைத் திணைப் பாடல்கள் | - | 107 |
| நெய்தல் திணைப் பாடல்கள் | - | 101 |
| மருதத் திணைப் பாடல்கள் | - | 033 |
| முல்லைத் திணைப் பாடல்கள் | - | 028 |
| மொத்தம் | - | 399 |

என்ற எண்ணிக்கையில் ஐந்து திணையிலும் பாடல்கள் உள்ளன.

பழந்தமிழர் வாழ்க்கையிலும், இலக்கியங்களிலும் அகம், புறம் என இரு பகுதிகள் இருந்தன. இதனைப் பின்வரும் கூற்று உறுதிப்படுத்துகிறது. **“தமிழர் இலக்கியத்திற்கு அடிப்படையாகவும், வாழ்க்கைக்கு அடிப்படையாகவும், அகம், புறம் என்ற இரு பகுப்புகளையும் முதலில் கொண்டனர். அதனால் தான் தொல்காப்பியத்தில் அக வாழ்க்கைக்கு அகத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல், மெய்ப்பாட்டியல் போன்ற பல இயல்புகளைக் கூறினர். புறவாழ்க்கைக்குப் புறத்திணையியல் என்று ஓர் இயலைக் கூறினர்.”** (ச.வே.சுப்பிரமணியம்., சங்க இலக்கியம் எட்டுத்தொகை நற்றிணை,ப.-14) மனித சமூகத்தில் ஒவ்வொருவரும் அகம் மற்றும் புறம் சார்ந்த வாழ்க்கையை வாழ விழைகின்றனர். அத்தகு வாழ்க்கைக்கானச் சூழலே அன்றும் இன்றும் நிலவிவருகின்றது.

புறத்திணை என்பது ஒருவனது வீரம், கொடை, போர், வெற்றி, அறம் போன்ற ஒழுக்கலாறுகளைப் பற்றி பேசுவதாகும். ஆண், பெண் இணைந்து வாழும் போது கிடைக்கும் இன்ப துன்பங்களைப் பற்றி கூறுவது அகத்திணையாகும். இதனை கே.கே.

ISSN:2583-2379



பிள்ளை, **"ஆணும், பெண்ணும் ஒருவரையொருவர் கண்டு காதலித்து மணம் புரிந்து இல்லறம் நடத்துவதோடு தொடர்புடைய வாழ்வின் பகுதி."** என்று கூறுகின்றார். (கே.கே. பிள்ளை, தமிழக வரலாறு, மக்களும் பண்பாடும், ப.-132). அகத்திணை அக ஒழுக்கம் பற்றி குறிப்பிடுகிறது. நற்றிணை அகத்திணை சார்ந்த நூல் ஆகும். அகத்திணையில் தலைவன், தலைவி, தோழி போன்றவர்களின் தனிப்பட்ட பெயர்கள் இடம் பெறாது. பொதுவாக தலைவன், தலைவி என்றே குறிப்பிடப்பட்டிருக்கும். இது குறிப்பிட்ட மதத்திற்கோ, இனத்திற்கோ, நாட்டிற்கோ சொந்தமல்ல. மாறாக உலகின் எப்பகுதியிலும், எந்த ஒரு தலைவன் தலைவியையும் குறிக்க வல்லது. இதனைத் தொல்காப்பியர்,

"மக்கள் நுதலிய அகன் ஐந்திணையும்

சுட்டி ஒருவர் பெயர்கொளப்; பெறாஅர்" என்கிறார். (தொல். பொருள். அகத். - 57) இத்தகு சிறப்புமிகு தன்மை சங்க இலக்கியங்களுக்கு மட்டுமே இருப்பதை நாம் இங்கு நன்கு உணர முடியும்.

**முடிவுரை**

இக்கட்டுரையில் நற்றிணையின் அனைத்துப் பாடல்களையும் அடிவரையறை அடிப்படையிலும், கூற்றுகள் அடிப்படையிலும், புலவர்களின் எண்ணிக்கை அடிப்படையிலும், குறிப்பாகப் பெண்பாற்புலவர்களின் எண்ணிக்கை அடிப்படையிலும், திணை அடிப்படையிலும் பகுத்துக் காட்டப்பட்டுள்ளன. மேலும் நற்றிணையில் தோழியின் கூற்றுக்களே மிகைத்திருப்பதையும் ஆதாரங்களின் வழி நிறுவப்பட்டுள்ளது.

**துணைநூற் பட்டியல்**

1. சுப்பிரமணியன், ச.வே., (உ.ஆ.),சங்க இலக்கியம் எட்டுத்தொகை நற்றிணை, மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், முதற்பதிப்பு - 2009.
2. நாராயணசாமி ஐயர், அ. பின்னத்தூர்., நற்றிணை நானூறு, கழக வெளியீடு, சென்னை, நான்காம் பதிப்பு - 1967.
3. மதுரைத் தமிழ் பேரகராதி, சந்தியா பதிப்பகம், சென்னை - 83. முதற்பதிப்பு - 2004.
4. கதிரைவேற்பிள்ளை, நா தமிழ் மொழி அகராதி, கௌரா ஏஜன்ஸீஸ், சென்னை - 5. (2003)
5. தமிழண்ணல், சங்க இலக்கிய ஒப்பீடு, மீனாட்சி புத்தக நிலையம் மதுரை. (2003)
6. வரதராசன், டாக்டர் மு.,பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை, பாரி நிலையம், சென்னை. (1964)